கவிதையின் கடைசி வார்த்தை
-------------------------------------------------------
இதயம் வேகமாய்த் துடிக்கையில்
நாக்குக்குக் கீழே வைக்கும் மாத்திரையைப்
பதறித் தேடுவதுபோல்
கவிதையை முடிக்கும் அந்தக் கடைசி வார்த்தையைத்
தேடுகிறேன் கிடைக்கவில்லை.
கவிதையை முழுமையாய் எழுதி முடித்து
அதனோடு ஒரு முத்தத்தைப் பரிமாறி
கையசைத்து வழியனுப்பிக் கதவடைக்க முடியவில்லை.
நேற்றுதான் வாங்கிய புத்தம் புதிய காரை
நட்டநடுச் சாலையில் நிறுத்தி விட்டு வெளியேறுவதுபோல்
என் கவிதைகளைப் பாதியில் நிறுத்தி விட்டு
மனமின்றி வெளியேறுகிறேன் நான்.
பாதிப் பயணத்தில் பாதையோரத்தில்
வரிசையாய் நிறுத்தப்பட்ட கார்களைப் போல்
நிற்கின்றன எனது கவிதைகள்.
இன்னும் சொல்லப்படாத அந்த கடைசிச் சொல்லின் பாரம்
என் முதுகில் சுமக்க முடியாத மூட்டையாய்க் கனக்கிறது.
சுடலை மாடனின் சுடர் விளக்குபோல்
தன்னந் தனி மாடத்தில்
இன்னமும் எரிந்து கொண்டிருக்கின்றன
முடிப்பதற்கான கடைசி வார்த்தை
கிடைக்கப் பெறாத எனது கவிதைகள்.
--- 15 அக்டோபர் 2020

